பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 11 2025 THURSDAY          12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் நமது பாதுகாப்புப் படையினர் சிறந்து விளங்குவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. விண்வெளித் துறையில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 6 புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.

4. இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் இன்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Isharani Bhruah* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் நமது பாதுகாப்புப் படையினர் சிறந்து விளங்குவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பாதுகாப்பிற்கு சவால் ஏற்படும் காலகட்டங்களில் பாதுகாப்புத் துறையினர் தங்களது தேசப்பற்று மற்றும் திறமையை சிறப்பான முறையில் வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, நமது படைகளின் தீவிரவாத எதிர்ப்பு மற்றும் தடுப்பு உத்தியை வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைப்புற பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், அப்பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும் ராணுவத்தினரின் பங்களிப்பு பாராட்டத்தக்கது என்றும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

விண்வெளித் துறையில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் அமைந்துள்ள, தனியார் விண்வெளி நிறுவனமான *Skyroot* வளாகத்தை, திறந்து வைத்த அவர், அந்த நிறுவனத்தின் முதலாவது ராக்கெட் விக்ரம்-*I*-ஐ அறிமுகம் செய்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், செயற்கைக் கோள்களை செலுத்துவதில் இந்தியா உலகின் முன்னணி நாடாக உருவெடுக்கும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்றாக திகழ்வதாக கூறினார்.

விண்வெளித்துறையில் இந்தியா சிறந்து விளங்குவதற்கு இஸ்ரோ பெரும் பங்காற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் இளையோருக்கு அதிக வாய்ப்புகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி தொழில்நுட்பம், வேளாண்மை, சுகாதாரம், பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் சார்ந்த தொழில்நுட்பங்களில் நாட்டின் இளையோர் சிறந்து விளங்குவதாகவும் பிரதமர் கூறினார்.

விண்வெளித் துறையில் இந்தியாவின் வளர்ச்சி. உலக நாடுகளுக்கு பயனளிக்கும் வகையில் அமையும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான், பஞ்சாப் மாநிலம், மோகா அருகே விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இப்பகுதியில் உள்ள Ransingh Kalan கிராமம், பயிர்க் கழிவு மேலாண்மையில் முன்மாதிரியாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த கிராமத்தில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்படாததால், நிலவளம் மேம்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பகுதியில் ரசாயன உரங்களின் பயன்பாடு 30 சதவீதம் குறைந்துள்ளதாகவும் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

இந்தியாவின் முக்கிய வர்த்தக பங்குதாரராக ஐக்கிய அரபு எமிரேட் திகழ்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் மத்திய வர்த்தகத் துறை கூடுதல் செயலாளர் திரு. Ajay Bhadoo, ஐக்கிய அரபு எமிரேட்டின் சர்வதேச வர்த்தகப் பிரிவு துணைச் செயலர் திரு. Juma Al Kait ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டுக் குழுக் கூட்டத்தில் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024-25ஆம் நிதியாண்டில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான இருதரப்பு வர்த்தகம் 19 புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்து, 100 பில்லியன் டாலரை கடந்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 6 புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், அமெரிக்காவின் 50 சதவீத வரிவிதிப்பால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர்கொள்ள உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7 புள்ளி எட்டு சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அந்த நிதியம் கூறியுள்ளது.*

*>>>>>>><<<<<<<<*

*சட்டவிரோத பணப்பரிவர்த்தனை குற்றச்சாட்டின் பேரில். ஆன்லைன் விளையாட்டுத் தளமான WinZo நிறுவனர்கள் சௌமியா சிங் ரத்தோர் மற்றும் பவன் நந்தா ஆகியோர் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இவர்கள் இருவரும் பெங்களூருவில் கைது செய்யப்பட்டு, அங்குள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*ஆன்லைன் விளையாட்டுகளில் ஈடுபட்டவர்களிடம் 43 கோடி ரூபாய் அளவிற்கு மோசடி செய்து அந்தப் பணத்தை, மத்திய அரசால் தடை செய்யப்பட்ட ஆன்லைன் விளையாட்டு தளங்களில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<<*

*இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்...*

*(சவுண்ட் பைட் – Opening Music – 8 செகண்ட்ஸ்)*

*கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் இன்று Cotton Queen, A Poet, Sleepless City ஆகிய படங்கள் திரையிடப்படவுள்ளன.*

*ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான ஜெய்லர் திரைப்படமும் இன்றிரவு திரையிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*(சவுண்ட் பைட் – Closing Music – 8 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவு பகுதியில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*இது ரிக்டர் அளவில் 6 புள்ளி ஐந்தாக பதிவானது.*

*இதன் காரணமாக, இந்தோனேஷியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலநடுக்கம் காரணமாக, இந்திய கடலோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*மாணவர்களின் உயர்கல்விக்கு உதவும் வகையில், மத்திய அரசு பிரதமரின் வித்யாலஷ்மி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வங்கிக் கடனுதவி தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – மாணவர்கள் 40 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*வடமாநிலங்களில் இன்று குளிரின் தாக்கம் அதிகரிக்க க் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

பஞ்சாபில் கடும் குளிர்காற்று வீசக்கூடும் என்றும் ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், தில்லி மற்றும் சண்டிகரின் ஒரு சில இடங்களில் பனிமூட்டம் நிலவக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா, தமிழகம், புதுச்சேரி மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர். இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட – செந்தாமரை 30 செகண்ட்ஸ்)*

>>>>>>>><<<<<<<<

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Isharani Bhruah* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர். 21-15, 21-8 என்ற செட்கணக்கில் யுக்ரைனின் *Polina Buhrova*-வை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் *Hariharan Amsakarunan – Treesha Jolly* இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Prarthana Thombare* – இங்கிலாந்தின் *Emily* இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.